# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



## நம்பிக்கை

உலக விடுதலைக்கு நீ
உயிர்ப்பலி கொடுத்தபோது
எல்லாம் முடிந்தது என்று
எஜமானர்கள் எக்காளமிட்டனர்
"எல்லாம் நிறைவேறிற்று" என்ற
உம் வாக்கு மூலத்தில்
உயிர்ப்பின் பொறி கனன்றதை
யார் உணர்ந்தார்கள் ?
சீடர்களுக்கே மூன்று நாள்
அல்லவா
தேவைப்பட்டது !
அப்படி இருக்க
மூடர்களுக்கு எத்தனை
நாளாகுமோ ?
இயேசுவே !
உமது உயிர்ப்பு ஒரு நிகழ்வல்ல.
ஒரு வழி; ஒரு வாழ்வு.
உயிர்ப்பின் வழியில்
சாவுகள் வரும், தடைகள் வரும்
ஆனால், நாம்
ஒருநாள் உயிர்ப்போம் !
உயிர்ப்பை ருசிப்போம் !
ஏனெனில் நாம்
புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டிருக்கிறோம்.

ஏப்ரல் - 2001 - 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் - 2001

மலர் 33 ❄ இதழ் 03


ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


அன்புடன் உங்களோடு..... - 01
சாவுக்கு ஒரு சவால் - 02
உயிர்ப்பு நற்செய்தியின்.... - 04
இலக்கிய மஞ்சரி - 06
உயிர்ப்பும் உயிரும் - 07
உலகமயப் போக்கும் சிவில்... - 08
வெகுஜனத் தொடர்பு ... - 10
சிறப்புச் செவ்வி - 11
திருச்சபைச் செய்திகள் - 14
மாணவர் பக்கம் - 16
பூலோகம்தான் பரலோகம் - 19
கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு.. - 20
கிறிஸ்தவ அடிப்படை வாதம் - 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

யேசுவின் உயிர்ப்பு விடுதலையின் உயிர்ப்பு
யேசுவின் உயிர்ப்பு வாழ்வின் உயிர்ப்பு
மூடப்பட்ட கல்லறைக்குள்
முடங்கிக் கிடப்பதல்ல வாழ்வு
உயிர்ப்பு என்பது விடுதலை
உயிர்ப்பு என்பது வாழ்வு
அவை இரண்டிற்கும் அர்த்தம் கொடுக்க
யேசுவின் உயிர்ப்பு அறைகூவல் விடுக்கிறது
இந்த அறைகூவல்
சமுதாயத்தில் பல உயிர்ப்புக்களை
ஏற்படுத்த வேண்டும்
உத்தமன் யேசுவின் உயிர்ப்பு
சமுதாயத்தில் பல கோணங்களிலும்
சமுதாயத்தில் பல வடிவங்களிலும்
இடம் பெற வேண்டும்

மரண ஓலங்கள் கேட்குமிடத்தில்
"வாழ்வு" உயிர்ப்பாக வேண்டும்
சிறுபான்மை மக்கள் வாழ்வில்
"உரிமை" உயிர்ப்பாக வேண்டும்
அகதி முகாம்களில்
"ஆதரவு" உயிர்ப்பாக வேண்டும்
சண்டைகள் மத்தியில்
"சமாதானம்" உயிர்ப்பாக வேண்டும்
இனவாத மனநிலையில்
"புரிந்துணர்வு" உயிர்ப்பாக வேண்டும்



நிலக்கண்ணி வெடிகள் நிலத்தில்
"பாதுகாப்பு" உயிர்ப்பாக வேண்டும்
மானபங்கப்படுத்தப்படும் பெண்கள் வாழ்வில்
"மானம்" உயிர்ப்பாக வேண்டும்

பசி, பட்டினி சூழ்நிலையில்
"பகிர்வு" உயிர்ப்பாக வேண்டும்
மனஸ்தாப மனங்களில்
"உறவு" உயிர்ப்பாக வேண்டும்
குழம்பிப்போன குடும்பங்களில்
"அன்பு" உயிர்ப்பாக வேண்டும்
செபமற்ற குடும்பங்களில்
செபம் உயிர்ப்பாக வேண்டும்

இவைபோன்ற உயிர்ப்புக்களை
உலகம் எதிர்பார்க்கிறது
ஒரு மீட்பை உலகம் எதிர்பார்த்தது
அந்த மீட்பை இயேசு கொடுத்தார்
தன்னை அர்ப்பணித்து
மற்றவர்களுக்காக வாழ்வதன் மூலம் கொடுத்தார்
அதுபோல
நீயும் உன்னை அடுத்தவர்களுக்காக அர்ப்பணித்து
அடுத்தவர்களுக்காக வாழ்ந்தால்
உலகம் எதிர்பார்க்கும் உயிர்ப்புக்களை
உன்னாலும் கொடுக்க முடியும்.

**ஆசிரியர்.**

## இறைவாக்கு



உயிரோடு இருப்பவரை கல்லறையில்
தேடுவதேன் அவர் இங்கே இல்லை
அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்

(லூக் 24/5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுக்கு ஒரு சவால்

– பெனி –

மரணம்
மனித வாழ்க்கையின்
முற்றுப்புள்ளி அல்ல என்பதை
மானுடத்திற்கு உணர்த்திய
மனுமகனே
உனக்கென்
ராஜ வணக்கம்.

இந்தச்
சித்திரைத் திங்களில்
கண்ணை மூடி - அந்தக்
காட்சியை காண்கிறேன்.

முப்பது ஆண்டுகள்
அன்னை மரியாள்
அளித்த பயிற்சியும்
மூன்று ஆண்டுகள்
பணித்தள பயிற்சியுந்தான்
கல்வாரி வரை - உன்னோடு
கைகோர்த்து வந்ததா?

என்ன விந்தையது?
ஆண்டவன் நீ
மானுடத்தின் துன்பத்தை
மரச்சிலுவையாய் சுமந்தாய்.

உன் பாடுகளால்
மரம்
மகிமை பெற்றது
எந்தவித
எதிர்பார்ப்புமின்றி
இரவல் தருவது
மரம் தானே.



கொடுத்து வைத்த முட்கள் !
உன் தலையில்
கிரீடமாகியதே !
நீ .....
தாகமாயிருக்கிறேன் - எனத்
தவித்தாய்.
அவர்கள் தந்தார்கள்
கசப்பான காடியை.

அவர்களுக்கெங்கே புரிந்தது
உன்னிடம்
விரவிக்கிடந்தது
மனித குலத்தின்
விடியலுக்கான
விடுதலைத் தாகமென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்
ஆவி பிரிந்த
அந்தக் கணப்பொழுதிலும்
அன்புக்கு அல்லவா
ஆதாரம் காட்டினாய்.
"இன்று
என்னோடு என்
தந்தையின் இல்லத்தில்
பந்தியமர்வாய்"

அந்தக் கடைசிக் காட்சி
அரங்கேறும் வேளையிலும்
கடமையுணர்வுதானே - உன்னிடம்
கனிந்து நின்றது.
"எல்லாம் நிறைவேறிற்று"
"தந்தையே உம் கரங்களில்..."
என தலை சாய்த்து
கண் வளர்த்தாய்.

சவத்திற்கு காவல் வைக்கலாம்
அவர்களோ உன்
கல்லறைக்குக் கூட
காவல் வைத்தார்களே !

ஆனால்
மூடிக்கிடந்த கல்லறை
மூன்றாம் நாள் உடைப்பட - நீ
சாவிற்கே சவாலானாய்.

உன்
உயிர்ப்பிற்குப் பின்தானே
உலக வரலாறே
கி.மு, கி.பி என
வகுக்கப்பட்டது.

இன்று நாம் வகுக்கப்படுகிறோம்.
வரலாற்றால் அல்ல.
ஜாதியால், மொழியால்.
மதத்தால் இனத்தால்
அடித்துக் கொள்ளுகிறோம்.

கல்வாரி நாயகனே......
அன்று நீ
சிந்திய ரத்தத்துளி
எமது விடுதலைக்கு
விடிவெள்ளியாகட்டும்.

உன் உயிர்ப்பு - என்
உறக்கத்தை கலைக்கட்டும்.

இந்த
உயிர்ப்பு விழா எம்
உள்ளத்தை உயிர்க்கட்டும்.

**மௌனம் பற்றி**

மௌனம் என்பது எது?
சப்தம் எழுப்பாமல் இருப்பதா?
மௌனம் என்பது அழைக்கப்படாதது தூண்டப்படாதது தேடிச் செல்லப்படாதது தன்னை அறிந்து உணர நிகழும் கூர்மையான முழுமையான பார்வையில் இயற்கையாக எழுவதே மௌனம். வாழ்கையின் அடையாளம் பேச்சு. ஆனால் மௌனம் வாழ்வேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு நற்செய்தியின் மையம்

அருள் தந்தை சிறிதரன் சில்வெஸ்டர்

வாழ்க்கைப் பாதையின் அடிச்சுவடு
பாடுகளின் வழித்துணை
மரணத்தின் மறுவாழ்வு
முடிவில்லா வாழ்வின் நுழைவாயில்
நற்செய்தியின் மையம்.

இந்நாளில் இயேசுக்கிறிஸ்துவின் சாவின் மீதான மாபெரும் வெற்றியைக் கொண்டாடுகின்றோம். இன்று உயிர்த்த கிறிஸ்து இனி இறக்க மாட்டார். சாவின் சங்கிலியை உடைத்த அவர், எம்மிடம் அதே வெற்றியை எதிர்பார்க்கிறார்.

மரணம் - "வாழ்க்கை எனும் கதைக்கு
ஒரு முடிவுரை"
"நான் எழுதும் கவிதைக்கு
யாரோ ஒருவர் வைக்கும்
முற்றுப்புள்ளி"

என்று கவிஞர்கள், அறிஞர்கள் பலவாறு பல கருத்துக்களை எடுத்தியம்பினாலும் உயிர்ப்பை உலகிற்கு வெளிப்படுத்தியவர் இயேசுக்கிறிஸ்து தான். "உயிர்ப்பின் அடிப்படைப்பொருள் இயேசு தரும் விடுதலையில் வெளிப்படுகிறது" என்று பார்க்லே சொல்கிறார்.

"இனி நம் வாழ்வில் ஆதவன் மறையும் அந்திப் பொழுதுகள் இல்லை. அனைத்தையும் கிறிஸ்து தம் உயிர்ப்பினால் உதயப் பொழுதாக்கி விட்டார்" என்று தூய கிளமெண்ட் அலெக்சாந் திரியா உணர்ந்து வெளிப்படுத்தினார்.

ஆம், இந்த உயிர்ப்பு மகிழ்ச்சியில் திளைக்க விரும்பாதோர் யார் ? . . . .

இந்த வேளையில் எமது திருமுழுக்கு வாக்குறுதிகளை திரும்பவும், ஒரு தடவை மீட்டுப் பார்ப்போம் – எம்மை நாமே கேட்டுப்பார்ப்போம் அதுவும் ஒரு புதிய முறையில் இன்றைய எமது சூழ்நிலைக்கு ஏற்ப ...

* ஒரே கடவுள் –அன்பும் இரக்கமும் நிறைந்தவர். அவரை மகனாகிய ஆண்டவராகிய இயேசு எமக்கு வெளிப்படுத்தினார். அதே இறைவனை – அவரது திருமகனை நாம் விசுவசிக்கிறோமா?

* நவீன உலகு எமக்கு முன்னால் வசதிகள், உடமைகள், இன்பங்கள் என பல சின்னச்சின்ன கடவுள்களை பிறப்பிக்கிறது – காண்பிக்கிறது. இந்தப் பொய்த் தெய்வங்களை வெறுக்கிறோமா?

* கிறிஸ்து – கடவுள் மகன், மரியாளிடமிருந்து பிறந்து இந்த உலகிற்கு வந்தார். அவர் பாடுபட்டு இறந்தார் நாமும் எமது பாவத்திற்கு இறக்க. அவர் உயிர்த்தார். நாமும் புதுவாழ்வுக்கு உயிர்த்தெழ அவரை நாம் விசுவசிக்கிறோமா?



* எம் வாழ்வின் பாதையில் உடன் பயணியாக, நண்பனாக அவர் என்றும் இருக்கிறார். அதை விசுவசிக்கிறோமா?

* சாத்தான் இருளின் ஆவி. அவனது செயல்கள் – அநீதி, வன்முறை, பேராசை, தற்பெருமை, ஆணவம், அகம்பாவம் என்பவற்றில் வெளிப்படுகின்றன. அவனையும், அவனது அருவருக்கத்தக்க செயல்களையும் வெறுக்கிறோமா?

* தீயவன், எம்மை பிழையான, வெறுமையான வாக்குறுதிகளோடு சோதிக்கின்றான். அதாவது "உலக செல்வங்கள் எம்மை நிறைவாக்கும் முடிவில்லா மகிழ்ச்சியைத் தரும் – இந்த வாக்குறுதிகளை வெறுக்கிறோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ஆனால் உண்மையின் ஆவி – இறை ஆவி அது தூய ஆவி. அன்பின், மன்னிப்பின், மகிழ்வின், நன்மையின், அமைதியின் ஆவி . . . அவரை விசுவசிக்கிறோமா? . . .

❋ ஒவ்வொரு மனிதனும் இறைவனின் சாயலும், அவர் வாழும் கோயிலுமாக இருப்பதை என்னில் – அடுத்தவனில் ஏற்றுக்கொள்கிறோமா?

❋ இன – மத – மொழி – நிறம் – சாதி வேறு பாடுகளைத் தாண்டி, தடைச்சுவர்களைத் தகர்த்து அனைவரையும் அன்பு செய்யத் தயாராக இருக் கிறோமா? . . . .

உயிர்த்த கிறிஸ்து எம்மை நோக்கி எழுப்பும் வினாக்களுக்கு விடை என்ன?

நாம் அனைவரும் ஏதோ ஒருவகையில் "இறப்பை" அறிந்தும் – உணர்ந்தும் இருக்கிறோம். அதிலே ஒரு முன் சுவை . . .

எப்போது – வாழ்வு கசக்கும் போது
– தனிமை பற்றிக்கொள்ளும் போது
– பயங்கள் கௌவிக்கொள்ளும் போது
– துன்பம் துரத்தும் போது
– நம்பிக்கை இழக்கும் போது
– உலகம் காலுக்குக் கீழே நடுங்கும் போது
– எமது ஒரு பாதம் சாவின் குழியில்

ஆயினும் – எமது வாழ்வில் உயிர்ப்பின் உணர்வு களும் உண்டு

எப்போது – உண்மை அன்பை அனுபவிக்கும் போது
– நாம் பிறரால் ஏற்றுக்கொள்ளப்படும் போது
– நாம் பிறரால் மன்னிக்கப்படும்போது
– அயலவனுக்கு எமது இதயம் திறந்து கொள்ளும் போது
– நம்பிக்கை நம்மிடம் திரும்பும் போது

நாமனைவரும் கல்லறைக் கட்டுக்கள் அவிழ்ந்து, உயிர்ப்புப் பெற்றெழுந்து வாழ்ந்த "இலாசர்கள்" தானே.

ஆக உயிர்ப்பு எப்போதெல்லாம்?
– எமது அன்பு ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும் நாம் மீண்டும் அன்பு செய்ய முயற்சிக்கிறோமா?
– எமது நம்பிக்கை காட்டிக் கொடுக்கப் பட்டாலும்
– மீண்டும் நம்பிக்கை கொள்கிறோமா . . நம்பிக்கையூட்டுகிறோமா?
– தவறி, அந்த தவறினைத் திருத்தி வாழ முயலும்போது எதிர்பார்ப்பு சின்னா பின்னமாக்கப்பட்டாலும் மீண்டும் விசு வாசம் கொள்கிறோமா?
– உடைந்த வாழ்க்கைத் துண்டுகளை ஒன்று சேர்த்து, கண்ணீரை துடைத் தெறிந்துவிட்டு, மீண்டும் வாழத் தொட ங்கிறோமா . . . .

அப்போது . . . நாமும் ஆண்டவரது உயிர்ப்பில் பங்குகொள்கிறோம்.
எனவே . . . இனி எதுவும் எம்மை அழிக்க முடியாது

வேதனை – பாவம் – வெறுப்பு – இறப்பு எதுவாயினும் முடியாது.

ஒவ்வொரு திருப்பாடுகளின் வெள்ளிக்குப் பின்னாலும், ஓர் உயிர்ப்பு ஞாயிறு நிச்சயம் உண்டு போல்,
வாழ்வுப்பாடுகளின் பின்பும் உயிர்ப்பு வாழ்வு உண்டு.

ஒவ்வொருவனும் தன் செயல்கள் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மற்றவர்கள் விஷயத்தில் கெட்ட பழக்கங்களாகக் கருதுபவற்றை தன்னிடமிருந்து அகற்ற வேண்டும். இதுவே ஒவ்வொருவரும் திருந்தி வாழ்வதற்கு வழி.

**நபி ஈசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கென தனியிடம் பெற்ற திரு. வ. அ. இராசரெத்தினம் அவர்களின் மறைவினால் உண்டான வெற்றிடம் நிரப்ப இயலாத ஒன்று. அவருடைய எழுத்துக்கள் சொன்ன செய்திகள் அதிகம்.

நாங்கள் பள்ளிச்சிறுவர்களாக இருந்தபோது அவருடைய எழுத்தை முதன்முதலாக அறியச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய மனைவியின் மறைவையொட்டி 'வீரகேசரி வார வெளியீட்டில்' தொடர்ந்து சில வாரங்களாக இலக்கிய ஆக்கமொன்றை எழுதியிருந்தார். அதைப்பற்றி குறிப்டுவதென்றால் அது ஒரு மிக நீண்ட சிறுகதை அல்லது மிகச்சிறிய குறுநாவல் என்றுதான் கூறவேண்டும். அக்கதை எம்மை மிகவும் பாதித்தது. அதுதான் வ.அ என்ற ஒரு எழுத்தாளர் உள்ளார் என்பதை சிறுவர்களான எமக்கு முதன் முதல் இனம் காட்டியது. அன்றிலிருந்து அவரைக் காணவேண்டும் என்று ஆவல். மிக நீண்ட காலத்தின் பின்தான் அவ்வாசை நிறைவேறியது. 'தொண்டன்' நடாத்திய ஒரு விழாவில் அவர் பாராட்டப்பட்டார். அவ் விழாவில் கலந்து கொண்டபோதுதான் மட்டக்களப்பு மண்ணில் அவரைக்காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் மண்ணில் விதைக்கப்பட்டு விட்டார். புதைக்கப்படவில்லை. மீண்டும் அவர் விருட்சமாவார். ஆம்! அவருடைய இலக்கியப்படைப்புகளால் இலக்கிய ஆர்வலர்களுடைய இதயங்களில்இதமான தென்றல் தரும் விருட்சமாக அவர் என்றும் காணப்படுவார்.

● இலக்கிய வெளியீடுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அவைபற்றி அறியக் கூடியதாய் இருக்கின்றது. இலக்கிய ஆக்கங்கள் வாசகர்களின் சுவையை ஈடுகட்டும் ஒன்றாக இருக்க வேண்டியது அவசியமென்றாலும் அது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்க வேண்டும். எமது போர்ச்சூழல், பொருளாதாரப் பின்னணி, கலாச்சாரக் கோலங்கள் என்பன வற்றை விளக்கும் ஆவணமாக அவை இருக்க வேண்டியது அவசியம்.

ஆனால் இன்றைய வெளியீடுகள் இவற்றையெல்லாம் யதார்த்தமாக பகிரங்கப்படுத்துகின்றனவா? என்பது வினாவே! உண்மையிலேயே உள்ளதையுள்ளபடி இலக்கிய ஆக்கங்களுக்குள் உள்வாங்குவது என்பது போர்க்காலக் குற்றமாகிவிடும் என்ற பயவுணர்வு ஆக்ககர்த்தாக்களின் இதயங்களிலே குடியிருப்பது என்பது என்னவோ உண்மைதான். என்றாலும் யதார்த்தத்தின் சில வெளிச்சக் கீற்றுக்களாவது வெளிவரவேண்டியது அவசியம் தான். யுத்த சூழல் ஓய்ந்து அமைதி நிலை ஏற்பட்டபின் ஏராளமான இலக்கிய ஆக்கங்கள் போரின் தடம்பற்றி வெளிவரும் என்பது எம் நம்பிக்கை. ஆனால் அது எப்போது என்பது தான் கேள்விக்குறி.

● தமிழ் எழுத்தாளர்கள் என்றால் பிச்சைக்காரர்கள் என்ற நிலை தென்னிந்தியாவில் பல தசாப்தங்களுக்கு முன்பு காணப்பட்டது. ஏன் நமது சுப்பிரமணிய பாரதியார் கூட வறுமையின் சின்னம்தான். ஆனால் கடந்த ஓரிரு




**ஆழியோன்**

தசாப்தங்களாக தமிழக எழுத்தாளர்களில் சில பகுதியினராவது பொருளாதாரப் பின்னணியில் பலம் பெற்று வருவது கண்கூடு. அவர்களில் சிலர் எழுதுவதை முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்கள் எழுதுவது தரமானதா அல்லது தரமற்றதா என்பது வேறுவிடயம். ஆனால் அவர்கட்கு நல்ல விற்பனைக்களம் உண்டு. புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் உலகெங்கும் தூவப்பட்டு கிடப்பதனால் உலகெங்கும் வாசகர்களம் காணப்படுகின்றது. அத்துடன் ஆழமாக வேரூன்றியுள்ள வெளியீட்டகங்களும் பல தமிழ் நாட்டில் உண்டு.

அதனுடன் ஒப்பிடும் போது இலங்கையின் தமிழ் எழுத்தாளர்களின் நிலைமை பின்தங்கியுள்ளமை வெள்ளிடைமலை. இலங்கையில் முழுநேரத் தொழிலாக எழுத்தை மேற்கொண்டு உயிர்வாழ்வதென்றால் அதற்கு இன்னமும் ஒரு நூற்றாண்டாவது செல்லத்தான் வேண்டும். ஏனெனில் அதற்குரிய பொருளாதார பலமோ, அரசியல் பின்னணியோ தமிழ் எழுத்தாளர்களிடயே தற்போது காணப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த உதயம்

செஞ்சட்டை மேனி போர்த்தி
சிரசில்முள் முடியும் வைத்து
வெஞ்சொற்கள் பலவும் பேசி
விளையாட்டாய் தலையில்குட்டி
நெஞ்சின்றி கழும ரத்தில்
நேயமின்றி அடித்துக் கொன்ற
வெஞ்சினத்தோர் வியப்பில் மூழ்க
வீரனேசு உயிர்த் தெழுந்தார்.

என்ன, இவன் தச்சமகன் தான்
என்றிருந்த மூடர் யாரும்
மன்னன் யேசுதன்னில் விண்ணோன்
மாட்சி கண்டு வியப்பே யுற்றார்
கண்களிலே கனிவு பொங்க
காவியத்தின் மூத்த மைந்தன்
மண்ணகத்தில் செய்த புதுமை
மந்தறிவோர் உணர வில்லை

தான்புவிக்கு வந்த போதும்
தரணியிலே வாழ்ந்த போதும்
தான்யாரென்றுவமை தன்னில்
தரணிக்கு உணர்த்தலானார்
தேன்மொழியால் இறையரசை
தினந்தோறும் உரைத்த போதும்
வான்மகனைக் காணா தோர்கள்
வானெழுந்த காட்சி கண்டார்

வாரத்தின் முதன் நாளன்று
வாசனையை பூசுதற்கு
தீர்த்தத்துட் பெண்கள் மூவர்
கல்லறைக்குச் சென்று நின்றார்
வீரமகன் யேசுவை அவர்கள்
காணாது திகைக்கலானார்
தூரத்தே நின்ற தூதர்
துயராதீர் உயிர்த்தா ரென்றார்.



பி தமிழ்ச்செல்வன் மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மயப் போக்கும் சிவில் சமூகமும்

(கடந்த இதழ் தொடர்)

பேராசிரியர் இ. தேவசகாயம்

## சமய அடிப்படைவாதமும் சிவில் சமூகமும்.

ஜனநாயக அரசிற்கு ஆளுமை (Govema bility) பதில் சொல்லும் கடமை (Accountability) ஒளிவு மறைவற்ற தன்மை (Transparency) என்பவை முக்கியமானவை. இப்பண்புகளையுடைய அரசுகளே ஜனநாயக அரசென்று கருதப்படுவதற்கான நியாயமான அரசுகளாகும்.

இன்று நடப்பதென்ன? ஜனநாயகத்தைக் காப்பதற்கென உருவாக்கப்பட்ட அரசின் அதிகார வர்க்கம் அனைத்தும் மக்கள் நம்பிக்கைய இழக்கும் வகையில் செயல்படுகின்றன. இந்நிறுவனங்களில் ஒரு சரிவை நாம் நாளும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக அரசியல் கட்சி எனும் நிறுவனம், வெறும் தேர்தல் இயந்திரமாக மாறி, கொள்கையற்ற, தனிநபர் வழிபாட்டை வளர்க்கும் நிறுவனமாக மாறிவிட்டது. இதைப்போன்றே நீதிமன்றம், நிர்வாகம் எனும் அமைப்பு களையும் கூறலாம். இந்நிலை மக்களை அரசிய லிலிருந்து அப்புறப்படுத்தி விடுகிறது. அரசியலகற்றப் பட்ட இச்சூழ்நிலையை இருவேறு சக்திகள் ஆக்கிரமித் துள்ளன. ஒன்று குற்றவாளிகள்; மற்றொன்று வகுப்பு வாதிகள்.

அரசியலுக்கு அப்பாலும் அரசியல் சார்ந்தும் செயல்பட வேண்டிய சிவில் சமூகங்கள் சமய அடிப் படைக் கருத்தியல்களால் சமய ரீதியில் பிளவு படு கின்றன. சமயம் ஒரு குழுவின் தனித்தன்மைக்கு அடையாளமாகின்ற போது, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரிவில் பெரும்பான்மை ஆதிக்கம் நியாயப்படுத்தப் படும். **ஜனநாயகம் என்பது வெறும் பெரும்பான்மை உரிமையல்ல. பன்மைச் சமூகத்தில் அனைத்துப் பிரிவினரின் உரிய பங்கேற்பை உத்தரவாதப்படுத்துவது தான் ஜனநாயகம்.** இந்த ஜனநாயகக் கோட்பாடு இங்கு கேள்விக்குள்ளா கிறது.

பெரும்பான்மை – சிறுபான்மை உங்கள் சமயம், எங்கள் சமயம், அவர்கள் – நாங்கள் என்ற பிரிவு சிவில் சமூக இணைப்பை இணைந்த செயல் பாட்டை தங்கள் போக்கை குறிப்பிட்ட சமய எல்லைக் குள் நிறுத்தி அதைக் கடந்து சிந்திக்கவோ செயல் படவோ விடாமல் தடுத்துவிடுகின்றன. பகைமையையும் பிரிவுகளையும் மையமாக வைத்து செய்யப்படும் வகுப்பு வாதம் உறவைத்துண்டிக்கிறது. உரையாடலை மறுக் கிறது. கருத்துக் கூறுவது மறுத்துரைப்பது, சமய அண்டைச் சமூகங்களை உருவாக்குவது போன்ற எல்லா மதிப்பீடுகளையும் தகர்த்து விடுகின்றது. எதேச் சாதிகாரம், மேலாண்மை, பன்மை மறுக்கப்படும் ஜனநாயகமற்ற தன்மை அனைத்தும் இன்று சிவில் சமூகத்திடம் ஒரு நம்பிக்கையற்ற தன்மையை ஒரு வெறுமையை உருவாக்கியுள்ளன. இச்சூழல் சிந்திக்கும் திறன்படைத்த எவருக்கும் மகிழ்வைத்தர இயலாது. இனிவரும் காலங்கள் ஒரு நிச்சயமற்ற மக்கள் சார்பற்ற காலமாக அமையுமாயின், நாம் என்ன செய்யப்போகி றோம்? இவ்வெறுமையை நிறைவு செய்ய எழுந்த சமூக இயக்கங்கள் என்ன செய்யப்போகின்றன?

சிவில் சமூகம் எந்த அளவுக்கு மக்கள் குழுக் களைத் திரட்டுவதில் ஆர்வம் காட்டுகின்றதோ அந்த அளவிற்கு அரசுக்கு நிர்பந்தம் கொடுக்க முடியும். இக்குழுக்கள் திட்டமிடல், மூலாதாரங்களை திரட்டல், கொள்கை ஆய்வு, மக்கள் கல்வி தொடர்பு சாதனம் தொடர்புக் குழுக்களோடு கொள்ளும் பரந்துபட்ட தொடர்பு, உரையாடல், சமாதானம் செய்வித்தல், பிரச் சினைகளைத் தீர்த்தல் என்ற பல முறைகளில் செயல் படலாம். இப்பணிகளினூடே இவர்களின் நம்பகத் தன்மை எப்போது உருவாகிறதெனில் இக்குழுக்கள் அரசின் சட்டங்களையும் மேலாண்மைக் கருத்தாக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கேள்வி கேட்கின்றபோதுதான். அதிகார வர்க்கம், சமயக்குழுக்கள், முதலாளிகள் கேள்விக் குள்ளாக்கப்பட வேண்டும். இது எளிமையான ஒன்றல்ல. கலகம், குழப்பம் என்பன தவிர்க்க முடியாதன என் பதனை புரிந்து கொள்கின்றபோது உண்மையான சிவில் சமூகம் செயற்படத் தொடங்கியுள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம். சிவில் சமூகம் ஒரு கூடிக்கலையும் அமைப்பாக இல்லாமல் எழுந்த பிரச்சினைகள் இனி எழப்போகும் பிரச்சினைகள் பற்றிய வரலாற்றுக் கண் ணோட்டத்தோடு கூடிய ஒரு தெளிவு பெற்றிருக்க வேண்டும். தங்கள் குழுக்களிடம் இப்பிரச்சினைகளை விவாதத்திற்குட்படுத்தத் தயங்கக் கூடாது. விவாதம் மாற்றத்திற்கு இட்டுச் செல்வதாக அமைய வேண்டும். இப்பிரச்சினைகளைச் சுற்றி மக்களை ஒருங்கிணைத்தல், தேவை ஏற்படுகையில் எதிர்க்கும் ஆற்றலை வளர்த்தல் எதிர்ப்பை அரசியலாக்குதல் என்ற நிலையில் இதன் வெற்றி உறுதியாகும்.

இறுதியாக இன்று வளர்ந்து வரும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள், எழுந்து வரும் எதிர்ப்புகள் போராட்டங்களினூடே இந்நாட்டின் பன்முகத் தன்மையை மறுக்கும் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்க் கும் அரசியல் குழுக்களையும் ஆய்வு செய்யவும் ஆதரிக்கவும் உரிய மனப்பாங்கும் வளர வேண்டும். சமயம், சாதி, இனத்தின் பெயரால் எழும் வகுப்புவாதப் பிரச்சினைகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்ற னர். சிறுபான்மையினரின் வாழ்வுரிமை மறுக்கப் படுகிறது. சமய அடிப்படைவாதத்தில் மக்களை ஒருங் கிணைத்து பாசிசத்துக்கு இட்டுச்செல்லும் போக்கு நிலவு கிறது. இப்போக்கு அடிப்படை ஜனநாயக உரிமை களை மறுக்கும் என்பதால் சிவில் சமூகத்தைச் சிதைக் கும் என்பதால் சிவில் உரிமை அமைப்புகள் இப்பிரச்சி னையில் இன்னும் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

அரசே உரிமை மீறல்களைச் செய்யும் போது அவற்றை எதிர்த்து அறிக்கை வெளியிடல், நீதிமன்ற உதவியை நாடல் என்பதோடு மட்டுமே நிறுத்திவிட முடியாது. பலகாலமாக சிவில் உரிமை அமைப்புகள் இப்பணியையே கடைப்பிடிக்கின்றன. அரசியல், கட்சி சார்ந்த அமைப்பல்லவெனினும் அரசின் கருவிகளை எதிர்க்கின்ற போதே அரசையும் எதிர்த்தாக வேண்டும். சிவில் உரிமை அமைப்புகள் அரசியல் ரீதியாக என்ன பங்கு வகிக்க வேண்டும் என்பதையும் யோசிக்க வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் தாங்கிப் போரா டுகின்ற சூழல் ஏற்படுகின்ற போது அரசுக்கருவிகளின் சட்டமீறிய செயல்களை அம்பலப்படுத்துவதோடு நின்று விடாமல் போராட்டங்களை நியாயமான காரணங்களை ஆய்ந்து நிலைப்பாட்மையும் தெளிவு படுத்தும் வலிமை பெறவேண்டும்.

சிவில் சமூகத்தின் நம்பிக்கையைப் பெறும் வகையில் அச்சமூகத்தில் ஆழமாக ஊடுருவ வேண்டும். சிவில் சமூகத்தின் பல்வேறு குழுக்களையும் நன்கு புரிந்து அவர்கள் பிரச்சினையில் எல்லா மட்டத்திலும் பங்குகொள்ள வேண்டும்.

சிவில் சமூகங்களுள் ஒன்றான திருச்சபையும், திருச்சபை சார்ந்த பொது நிலையினரும் இக்கடமை களைச் செய்வதே பொது நிலையினரின் சரியான அரசியல் ஈடுபாடாக இருக்கும். பொதுநிலையினர் தம்மைச் சிவில் சமூகத்துள் ஒரு குழுவாக இணைத்துக் கொண்டு ஜனநாயகம் தரும் வெளியைப் (Space) பயன்படுத்தி தலையீடு செய்வதே பொது நிலையினரின் சரியான அரசியல் ஈடுபாடாக அமையும்.

நன்றி. மறை அருவி.

**அவைகள் உனக்கு கூறுவது.**

"உன் இதயம் என்னைப் போல விசுவாசமாக இருக்க வேண்டும்" என்று வானம் கூறுகிறது.

"என்னைப் போல் பொறுமையாக இரு" என்று கூறுகிறது பூமி.

"என்னைப் போல குளிர்ச்சியாகவும் அமைதி யாகவும் இருக்க வேண்டும்" என்று கூறுகிறது காற்று

"என்னைப் போல மற்றவர்களுக்கு உதவி செய்" என நினைவு படுத்துகிறது தண்ணீர்.

"அநியாயங்கள் அனைத்தையும் எரித்து விடு" என்று கூறுகிறது நெருப்பு.

பிரரிலிரந்து
ஜெயந்தி சாந்தகுமார்
உவர்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஓர் அறிமுகம்

## ஒரு நாள் கருத்தரங்கு



திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத்தொடர்பு நிலையம் கடந்த மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஓர் அறிமுகம் என்னும் கருத்தரங்கொன்றை நடாத்தியது. அருள் ஒளி இல்லத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் முப்பது இளைஞர்கள், இளம்பெண்கள் பங்கு கொண்டனர்.

காலை 9.00 மணி அளவில் மங்கல விளக்கேற்றலோடு செபவழிபாடு நடைபெற்றது. மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவைச் சேர்ந்த திரு.S. ஜெயராஜா அவர்கள் செபவழிபாட்டை நடத்தினார். அதனை அடுத்து திரு மட்/மறைமாவட்ட சமூகத் தொடர்புத்துறை இயக்குனர் அருள் தந்தை J.A.G. இரட்ணகுமார் அவர்கள் அனைவரையும் வரவேற்று இக்கருத்தரங்கின் நோக்கத்தையும் இன்றைய காலத்தில் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி விளக்கமளித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மறைமாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தமதுரையில் மனித வாழ்வில் இன்று தொடர்பு சாதனங்கள் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தையும், தொடர்பு சாதனங்கள் மீது திருச்சபை கொண்டுள்ள அக்கறை, அதனைப் பயன்படுத்துவதில் காட்டும் கரிசனை, தொடர்பு சாதனங்கள் மீது நமக்குள்ள பொறுப்பு என்பன பற்றி குறிப்பிட்டார்.

அதைத்தொடர்ந்து தொடர்பாடலும் தொடர்பூடகங்களும் இன்றைய நிலை, ஊடகங்களும் ஊடாட்டமும் இயங்கும் நிலை, தொடர்பாடலும் தொடர்பூடகங்களும் எமது செயற்பாடு, என்னும் தலைப்புகளை உள்ளடக்கியதாக கருத்தரங்கு நடைபெற்றது. இதனை கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் எஸ்.ஜெயசங்கர் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். உரை கேள்வி, பதில் என்றில்லாமல் கலந்துரையாடலாகவே கருத்தரங்கு நடைபெற்றது. பங்கு கொண்டவர்கள் ஈடுபாட்டோடு கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள இது வாய்ப் பளித்தது.

மதிய உணவுக்குப்பின் குறுந்திரைப்படம் இரண்டு காட்டப்பட்டு அது தொடர்பான பகிர்வுகளும் இடம்பெற்றன.

இறுதியாக மாலை 5.00 மணி அளவில் இயக்குனர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கருத்தரங்கினை முடித்துவைத்தார். பங்கு கொண்டோர் தமது மதிப்பீடுகளில் தொடர்பு சாதனங்களின் செயற்பாடுகளையும், அவற்றுக்குப்பின்னால் உள்ள வர்த்தக வல்லாதிக்க நலன் களையும், பயன்பாடுகளையும் தெரிந்து கொண்டதோடு தொடர்பு சாதனங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பெற முடிந்தது என்றும் இத்தகைய கருத்தரகுங்கள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புச் செவ்வி

# 125வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் மட்/புனித சிசிலியா மகளிர் கல்லூரி



மட்டக்களப்பு புளியந்தீவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கம்பீரமாகக் காட்சி தருகின்றது மட்/புனித சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம். 'கத்தா' மரங்கள் நிழல் பரப்பி நிற்க, கன்னியர் மடம் அருகாக இருக்க நகரத்தின் பரபரப்புக்கள் இன்றி மனோரம்மியமான இடத்தில் அக்கல்லூரி அமைதி காத்து நிற்கின்றது.

முன்புறமாக மட்/புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை, இடப்புறமாக புனித மரியாள் இணைப் பேராலயம் என்றவாறு பாடசாலைச் சூழல் மிகவும் புனிதமும், பக்தியும் நிறைந்த இடமாகக் காணப்படுவது இப்பாடசாலைக்கான மேலதிக சிறப்புகளாகும்.

நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் என்பது சாதாரண விடயமல்ல. மூன்று நான்கு தலைமுறைகளைக் கொண்ட காலம் அது. அவ்வளவு காலமாக ஒரு நிறுவனம் நிலையாக நிற்பது சாதனைக்குரிய அம்சமாகும். ஆம்! புனித சிசிலியா மகளிர் கல்லூரி இவ்வாண்டு தனது 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.

கத்தோலிக்கத் திருச்சபையானது தனது மறைபரப்புப் பணியை மேற்கொண்ட அதே வேளை, அதற்குச் சமாந்தரமாகக் கல்விப்பணியையும் மேற்கொண்டு வந்திருக்கின்றது. அது கல்விப்பணிக்காக தூவிய சில விதைகள் இன்று பெரு விருட்சங்களாக கிளைபரப்பி, நிழல்பரப்பி சத்தமில்லாமல் சாதனைகள் புரிந்து கொண்டு வருகின்றன. அதில் ஒரு விதை நாற்றாகி, மரமாகி, விருட்சமாய் வானோங்கி நிற்கின்றது. ஆம்! அது தான் மட்/புனித சிசிலியா மகா வித்தியாலயம்.

அன்று ஒரு விடுமுறை தினம். 'தொண்டன்' சஞ்சிகையின் சார்பில் புனித சிசிலியா மகளிர் வித்தியாலய அதிபர் அருட். சகோதரி மேரி எலிசபெத் அ.கா அவர்களைச் செவ்வி காணச் சென்றேன். அதிபர் அலுவலகத்தில் முன்புறத்தில் அமைதியாக புன்முறுவலுடன் என்னை அருட்சகோதரி அவர்கள் வரவேற்றார்கள். ஒதுக்கிய நேரத்திற்கு சற்றுத் தாமதமாகவே நான் சென்றிருந்தேன். என்றாலும் செவ்விக்காக மிகவும் பொறுமையுடன் காத்திருந்தார்கள். அவரின் முன்னால் உள்ள மேசையில் ஆசிரியர்களின் சம்பளக் காசோலைகள்.

சம்பிரதாய பூர்வமான வணக்கங்களுடனும், தாமதத்திற்கான மன்னிப்பு கோரல்களுடனும் செவ்வி ஆரம்பமானது.

● ***உங்கள் பாடசாலையின் வரலாற்றைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?***

◆ ஆம், 1876ம் ஆண்டு 69 பிள்ளைகளுடன் இப்பாடசாலை ஆரம்பமானது. வண.பிதா.பிரான்சிஸ் சேவியர் (O.M.I) அடிகளார் இதனைத் தாபித்தார். 1893ல் புனித ஜோசப் கிளனி என்னும் (ஐரிஸ்) சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் இப்பாடசாலையைப் பொறுப்பெடுத்தனர்.

1898ல் மௌண்ட் கார்மல் என்ற தமிழ்ப்பிரிவும், சிசிலியாஸ் என்ற ஆங்கிலப் பிரிவுமாக பாடசாலை செயற்பட்டது. 1922ல் அப்போஸ்தலிக்க கார்மல் கன்னியர் இப்பாடசாலைகளின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர்.1960ல் இப்பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. தொடர்ந்து 1968ல் இப்பிரிவுகள் இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றாக இயங்கத் தொடங்கின. 1970ல் க.பொ.த. (உ/த) கலைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. 1979ம் A,B தரப்பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ***இப்பாடசாலை மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் எல்லாம் நிறைவேறிக் கொண்டு வருகின்றன என நீங்கள் கருதுகிறீர்களா?***

◆ (இலேசான சிரிப்புடன் பதிலை ஆரம்பித்து பின் கடும் சிந்தனையுடன் தொடர்கின்றார்...) இலக்குகள் எல்லாம் உடன் நிறைவேறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவை படிப்படியாகத்தான் கிடைக்கும். நாம் மெல்ல, மெல்ல எம் இலக்குகளை எட்டி வருகின்றோம். அவற்றைப் பெறுவதற்கான எல்லா வளங்களும் எம்மிடம் உள்ளது என்று கூற இயலாது. இது நகரப்பாடசாலை. சகல வளங்களும் இருக்கின்றன என்றுதான் பலரும் நினைக்கின்றனர். அது தவறு எமது மாணவர்களில் பெரும்பாலானோர் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; சிலர் ஆதரவற்ற பிள்ளைகள். ஆனால் எமது முக்கியமான குறிக்கோள் எமது பாடசாலையை விட்டு வெளியேறும் ஒரு பிள்ளை கல்வியில் மட்டு மல்ல, சமூகத்தில் வாழ்வதற்கு தகுதியுள்ள சிறப்பான விழுமியங்கள் உள்ள பிள்ளையாக வெளியேற வேண்டும். அதாவது பூரண முள்ள பிள்ளையாக வெளியேற வேண்டும். இக்குறிக்கோளில் நாம் வெற்றிகாணத் தொடங் கியுள்ளோம் என்று நான் நினைக்கின்றேன்.



● ***தங்கள் பாடசாலையின் மாணவர் வளம் பற்றிச் சற்றுச் சொல்வீர்களா?***

◆ 2085ற்கு மேல் மாணவிகள் உள்ளனர். அதில் ஐம்பத்தெட்டு விழுக்காட்டினர் கத்தோலிக்கப் பிள்ளைகள். எல்லா மாணவிகளிடமும் உள்ள திறமைகளை இனம் கண்டு அவர்களை சமுதாயத்தின் சிறப்பான பிள்ளை களாக்க நாம் பாடுபடுகின்றோம்.

● ***கல்லூரிச் செயற்பாடுகளில் உங்களுடன் பணிபுரியும் ஆசிரியர்கள் பற்றிச் சிலவார்த்தைகள் கூறமுடியுமா?***

◆ எமது ஆசிரியர் குழாமைப்பற்றி நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். அவர்கள் எனக்கு மிகவும் ஒத்துழைப்பு தருகின்றார்கள். தங்களையே தியாகம் செய்து பிள்ளைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றார்கள்.

● ***பரீட்சைகள் சம்பந்தமாக உங்கள் பிள்ளைகள் பெற்றுள்ள அடைவுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?***

◆ எமது பிள்ளைகள் கல்வியில் நன்றாகப் பிரகாசிக்கின்றார்கள். பல மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் 'D' பெற்றுள்ளார்கள். பல மாணவிகள் மருத்துவக் கல்லூரிக்குச் சென்றுள்ளனர். இதில் குறிப்பிடவேண்டிய விடயம் என்னவென்றால் ஒரு மாணவி அவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரை எமது ஆசிரியர்கள் நன்றாக பயிற்றுவித்தனர். அப்பிள்ளை நான்கு பாடங்களிலும் (உயர்தரக் கலைப்பிரிவு) 'A' சித்தி பெற்றது. சிலவேளை அப்பிள்ளை தனது பிரதேசத்திலேயே இருந்திருந்தால் அதன் திறமை கண்டறியப்படாமல் இருந்திருக்கலாம்.

*குறிப்பு – இப்பேட்டியை கண்ட சில தினங்களின் பின் க.பொ.த (சா.த) பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. அதில் இப்பாடசாலை மாணவிகள் ஆறுபேர் அளவில் அனைத்துப் பாடங்களிலும் 'D' தரம் பெற்றுள்ளனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ***மாணவிகளின் பிற புறக்கிருத்திய செயற்பாடுகள் பற்றிக் கூற முடியுமா?***

◆ ஆம்! எமது மாணவிகள் பல தேசிய சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். தமிழ்த்தின விழாப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், இவைபோன்ற பல போட்டிகளிலும் விருதுகளைப் பெற்றுள்ளார்கள். 1999ம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளின் இசை விழா விருதைத் தட்டிக் கொண்டார்கள்.

இப்பிள்ளைகளின் பொது அறிவு விருத்திக்காக பல செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். அத்துடன் கணனி வகுப்புகளை நடத்தி வருகின்றோம்.

முக்கியமாக பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகின்றோம். சர்வமத வழிபாடுகள், தியானங்கள், அவரவர் சமய அனுட்டானங்கள் என்பவற்றை நடாத்தி வருகின்றோம். குறிப்பாகப் பெரியார்களை அழைத்து நல்ல உரைகளைக் கேட்க வழி சமைக்கின்றோம்.

● ***உங்கள் 125வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஏதாவது விசேட செயற்றிட்டங்கள் செய்யவுள்ளீர்களா?***

◆ ஆம் 125வது ஆண்டு நிறைவு விழாவை அடையாளப் படுத்தும் வண்ணமாக சிசிலியன் நடைபவனி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். பெற்றோரின் ஏகோபித்த வேண்டுகோள்களின்படி ஆரம்பப் பிரிவு பிள்ளைகட்கு விசேட சீருடையொன்றை சிறப்பாக வெளியிட எண்ணியுள்ளோம். இது தவிர 125 மரக் கன்றுகளை நாட்ட எண்ணியுள்ளோம்.

குறிப்பு ~ *பேட்டியின் சில தினங்களின் பின்னர் சிசிலியன் நடைபவனி போன்றன நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

● ***இறுதியாக வேறு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?***

◆ எமது பாடசாலையின் வளர்ச்சியின்போது நாம் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் இவற்றையெல்லாம் இலகுவாக வெற்றி கொள்ளக் கூடியதாக உள்ளது. அதற்கான ஒரேயொரு காரணம் ஜெபம்தான். நாம் இப்பாடசாலைக்காக இடைவிடாது ஜெபிக்கின்றோம். அது எங்களுக்குப் பலமாக உள்ளது. நீங்களும் எங்களுக்காக செபியுங்களேன்.

---

**சுமார் ஒன்றரை மணித்தியால செவ்வியின் பின் அதிபர் அருட்சகோதரி மேரி எலிசபெத் அ. கா. அவட்கட்கு தொண்டன் சார்பில் நன்றி கூறி விடைபெற்றேன்.**

**செவ்வி கண்டவர் - ஆழியோன் -**


*ஆண்டவர் இயேசு உயிர்த்த நன்னாளில் அனைவரும் அனைத்திலும்உயிர்த்திட, அடிமை விலங்குகள் உடைந்து ஆனந்தம் அமைதி அகத்தினில் அரும்பிட வாழ்த்துகின்றோமே!*

**தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள் விற்பனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## கத்தோலிக்கர்களுக்குத் தடை

ரஷ்யாவிலும் ஆர்த்தடாக்ஸ் கிறீஸ்தவர்கள் அதிகமாக உள்ள நாடுகளிலும் கத்தோலிக்க திருச்சபை வளர்ந்து வருவதைத் தடைசெய்வதற்கான வழிகளை ஆராயுமாறு ரஷ்ய நாடாளுமன்றம் வெளியுறவு அமைச்சகத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. சுமார் 14 கோடியே 50 இலட்சம் மக்களைக் கொண்ட ரஷ்யாவில் ஏறக்குறைய ஐந்து இலட்சம் கத்தோலிக்கரே உள்ள வேளை இக்கத்தோலிக்கர்கள் வேகமாக அதிகரித்து வருவதை தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதற்கு ரஷ்ய நாடாளுமன்றம் இம்மாதத் தொடக்கத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. இதற்கிடையே இத்தீர்மானத்தை எதிர்த்து கடிதம் எழுதியுள்ள ரஷ்ய ஆயர் பேரவை இந்நடவடிக்கையால் சிறுபான்மைக் கத்தோலிக்கர் ஓரங்கட்டப்படுவார்கள் என்ற கவலையை வெளியிட்டது. அதே வேளை ரஷ்ய கத்தோலிக்கர்கள் சட்டத்துக்குப் பணிந்து அரசுக்கு விசுவாசமாக இருப்பதாகவும் ஆயர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## பத்தாவது ஆயர் பேரவை

வரும் செப்டம்பர் முதல் அக்டோபர் 27 வரை திருப்பீடத்தில் பத்தாவது ஆயர் பொதுப் பேரவை இடம் பெறவுள்ளது. ஆயர், உலக நம்பிக்கையாம் இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியின் ஊழியர் என்ற தலைப்பில் இடம்பெறவிருக்கும் இப் பொதுப் பேரவையின் தலைமைப் பிரதிநிதிகளாக ஆயர்களுக்கான திருப்பீட திருப்பேராயத் தலைவர் கர்தினால் வான் பக்கிஸ்தந்தே, ஐவரிகோஸ் நாட்டின் அபிர் ஜான் கர்தினால் பேர்னார்ட், மும்பாய் கர்தினால் ஐவன் டயஸ் ஆகியோரை நியமித்துள்ளார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அவர்கள். எடுத்துரைப்பவர்களின் தலைவராக நியூயோர்க் கர்தினால் எட்வேட் மைக்கல் ஈகனையும் சிறப்புச் செயலாளராக ஆயர் மச்செல்லோ செம ரேராவையும் நியமித்துள்ளார் திருத்தந்தை.

## திருத்தந்தையின் உக்ரேன் திருப்பயணம்

வரும் மே மாதத்தில் இடம் பெறவிருக்கும் உக்ரேனுக்கான திருத்தந்தையின் திருப்பயணத்தின் போது திருத்தந்தையின் வரவை தாம் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக அந்நாட்டு ஆர்த்தடாக்ஸ் பிதாப்பிதா பிலாரஸ் கூறியிருக்கிறார். உக்ரேன் ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின்மீது ரஷ்ய ஆர்த்தடாக்ஸ் திருச்சபையின் ஆதிக்கத்தைக் கண்டித்துள்ள பிதாப்பிதா பிலாரஸ் தமது திருச்சபையே உக்ரேனின் உண்மையான திருச்சபை என்றும் கூறியுள் ளார். உக்ரேனில் கியூம் மாநில பிதாப்பிதா பிலாரஸ் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் ஆர்த்தடாக்ஸ் திருச்சபை மற்றும் மாஸ் கோவின் ஆதரவில் இயங்கிவரும் திருச்சபை என இருபிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. பிதாபிதாவின் கியூஆர்த் தடாக்ஸ் திருச்சபையின் தலைமையை ஒரு காலத்தில் அங்கீகரித்த மாஸ்கோ 1992ல் அவ் அங்கீகரிப்பை நிராகரித்து விட்டது. எனினும் உக்ரேனில் கியூ பிதாப்பிதா பிலாரஸ் 60 இலட்சம் விசுவாசிகளின் தலைவராக வல்லமை பொருந்தியவராகச்

செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் உக்ரேனில் தனித்தியங்கும் ஆர்த்தடாக்ஸ் திருச் சபையின் தலைவர்களை திருத்தந்தை சந்திக்கக்கூடாது என்று மாஸ்கோ பிதாப்பிதா 2ம் அலெக்சி கூறிவருகிறார்.

**அன்னை திரேசாவுக்குச் சிலை**

கல்கத்தாவில் ஆளுயர அளவில் அன்னை திரேசா உருவச்சிலை ஒன்று திறக்கப் பட்டுள்ளது. வெங்கலத்தினாலான இச் சிலையை பிரிட்டிஸ் சிற்பி ஜொனாத்தன் வடித்தெடுத்துள்ளார். இச்சிலையைப் பார்க்கின்றபோது அன்னை திரேசாவை நேரில் பார்ப்பதுபோல் உள்ளது என்றும் அவரது அன்பு. மற்றும் ஆசீரை இதன் வழி நினைவு கூருகின்றோம் என்றும் பிறரன்பு சபைத் தலைவி அருள் சகோதரி நிர்மலா ஜோசி கூறினார்.

**"மனிதன் அன்பின்றி வாழமுடியாது. அன்பு அவனுக்கு வெளிப்படுத்தப்படாவிடின் அன்பை அவன் எதிர் கொள்ளாவிடின் அதனை அவன் அனுபவிக்காவிடின் அதில் அவன் பங்கு கொள்ளாவிடின் அவன் தனக்கே ஒரு புதிராகவும் அவனது வாழ்கை உணர்வற்ற தாகவும் காணப்படும்."**

'அருள் சின்னப்பர்'

**மறைபணியாளர்களுக்கு அமைதி விருது**

பிலிப்பைன்ஸ் நாட்டில் மிந்தனோவா பகுதியில் பணி புரியும் 3 மறைபணியாளர்களுக்கு அந்நாட்டின் அமைதிவிருது வழங்கப்பட்டுள்ளது. மதங்களிடையே பேச்சுவார்த்தையையும் அமைதிக் கலாசாரத்தையும் ஊக்குவிக்கக் கடந்த 18 வருடங்களாக மிந்தனோவா பகுதியில் பணியாற்றி வரும் பிரான்ஸ் நாட்டுக் குரு மிஷேல் மரிய ஜோசப் பூர்விகக் குடிமக்களின் உரிமைக்காக 40 வருடங்களாக போராடி வரும் அருட்கன்னிகை மிக்கேலே கோஹொம்பா மற்றும் இதய நோய்க்கு 28 ஆண்டுகளாக உழைத்துவரும் இத்தாலியக் குரு பீற்றர் ஜெரேமியா ஆகிய மூவருக்கும் அமைதி விருது வழங்கப் பட்டுள்ளது. பேச்சுவார்த்தையின் மூலமே முரண்பாடுகளைக்களைய முடியும் என்னும் நோக்கில் பணியாற்றி வரும் மூவருக்கும் அமைதி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.

**பகட்டும் பேராவலுமே மனிதனிடமுள்ள பெருங்குறைகள் ஆகும்.**

உளவியலாளர் அட்லர்

**நீ யாராவது ஒருவரை அன்பு செய்யும் வரை உனக்கு எதுவுமே அர்த்தம் தருவதாக இருக்காது.**

**(கூம்மிஸ்ல்)**

## பாவத்துள் மரித்து.........

ஆசையில் வாழ்கிறான் என்றும் மனிதன்
ஆணவத்துள் மிதக்கிறான் இன்னும் மனிதன்
தாழ்மையில் வாழ்வதை என்றும் ஏற்றால்
மேன்மையின் உயர்வதை இன்னும் அடையலாம்

தன்னலம் தன்னை தலையாய்க் கொண்டு
தரணியில் தவறாய் வாழ்ந்திடும் மனிதன்
பிறர்நலம் தன்னை என்றும் போற்றின்
பாரினில் மனிதனதய் வாழலாமன்றோ

பாவத்துள் என்றும் வாழ்ந்திடும் மனிதன்
பாவியாம் தன்னை உணர்ந்து கொண்டாலே
பாவத்துள் என்றும் மரித்துப் பின்னர்
பரனின் உயிர்ப்பின் சான்றாகலாமே

P. டினுஜா
உவர்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பக்கம்



## க.பொ.த. (சாதாரணம்)

### 7ம் பாடம்

**ஒன்றிப்பின் மூலம் நிறைவான வாழ்வைப் பெறுவோம்**

"மனிதன் தனிமையாக இருப்பது நல்ல தன்று அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்கு வேன்"

தொடக்க நூல் : 18

கிறிஸ்தவ ஒன்றியத்தின் அடித்தளம், மூவொரு கடவுளோடு ஒன்றிக்குமளவுக்கு, அது உயிரூட்டம் பெறுகிறது.

மனிதன் இயற்கையிலேயே ஒரு சமூகப்பிராணி. தனித்துவாழ அவனால் முடியாது.

ஒன்றிப்பின் அடித்தளமும், ஆரம்பமும் இறைவ னானபடியால், அவரால் ஏற்படுத்தப்பட்ட குடும் பத்தில் அதிகமாகவும், குறைவாகவும் ஒன்றிப்புப் பண்புகளைக் காணமுடிகிறது.

இறைவனது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் ஆதியிலிருந்தே சமுதாயமாக வாழ்வதில் ஈடுபாடு டையவனாக இருந்தான்.

இறைவன் மனிதரிடமிருந்து ஒன்றிணைந்த சமூக வாழ்வை எதிர்பார்க்கிறார்.

உலகில் பல சங்கங்கள், இயக்கங்கள், சபைகள் என்பன போன்றவை, உலகளாவிய ரீதியில் உலக நோக்கங்களுக்காகச் செயற்படுகின்றன.

அதேவேளை, உலக நோக்கங்களுக்காக அல்லாது, உலக மதிப்பீடுகளுக்கு அப்பாற் பட்டதாக, கிறிஸ்து வுக்கூடாகத் தூய ஆவியாரின் வழி நடத்தலுடன் இயங்கும் ஒன்றியங்களுமுள்ளன.

லூக்கா நற்செய்தி 9:1-16 இன்படி இயேசு உலக மக்களுக்காகப் பன்னிரு திருத்தூதரையும் அனுப்பு கிறார்.

மனித பலவீனங்கள் மத்தியில் பயணம் செய்த இக்கிறிஸ்தவப் பக்தர்களின் ஆன்ம வாழ்வு கிறிஸ் துவின் உயிர்ப்பின் மூலம் பூரணத்துவம் பெறு கிறது.

கிறிஸ்து சிலுவைமரத்தில் கடைசி மூச்சை விட்ட தோடு நிலையான சபை உதயமாகியது. இது தூய ஆவியாரின் வருகையின் பின் சரியான முறையில் செயற்படத் தொடங்கியது.

பரிசுத்த திருச்சபை மாவட்டம், பங்கு என்றவாறு நிலைத்திருக்கிறது.

யோவான் நற்செய்தி 3:5 இன்படி இறையாட்சியில் நுழைய வேண்டுமானால், நீரினாலும், தூய ஆவியா ராலும் அருட்பொழிவு செய்யப்பட வேண்டும்.

திருமுழுக்கு மூலம் கிறிஸ்தவ ஒன்றியத்தில் அங்க த்துவம் பெறுகிறோம்.

திருமுழுக்குப் பெறுவோர் ஒவ்வொருவரும் பரிசுத்த திருத்துவமாகிய இறை விசுவாசத்தை வெளிப் படுத்துவதற்குச் சான்று பகருவதற்குத் தேவை யான கொடைகளைத் தூய ஆவியார் தருவார்.

கிறிஸ்துவிடமிருந்து திருத்தூதர் பெற்ற பணியின் பொறுப்பு, கடமை கிறிஸ்தவர்களிடம் நிறைந் துள்ளது.

திருமுழுக்கின் மூலம் நாம் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்குப் பணியில் பங்குபற்று கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8ம் பாடம்
### தூய ஆவியானவர் நமது வாழ்வை உயர்த்துகின்றார்

"என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்".

யோவான் 14:26

கிறிஸ்து இயேசு யோர்தான் நதிக்கரையிலே திருமுழுக்குப் பெறுகையில் தூய ஆவியார் அவரைத் திருப்பொழிவு செய்தார்.

சீடர்களும் இறை தந்தைக்குப் பூரண பதிலளிக்கத் தேற்றரவாளர் உதவினார்.

இறைவனுக்குப் பதிலளிப்பதற்கும், உண்மைக் கிறிஸ்தவனின் பொறுப்புமிக்க கடமையைச் செய்வனே நிறைவேற்றும் சக்தி உரிமை ஆகிய வற்றை வழங்கவும் ஒரு வழிகாட்டியாகத் தூய ஆவியார் எமக்களிக்கப்பட்டுள்ளார்.

தூய ஆவியார் தம்மில் செயற்படக் கிறிஸ்து இடமளிக்கிறார்.

மாற்கு 3:1-6

நம் வாழ்வில் எதிர் நோக்கும் சவால்களின் போது தூய ஆவியாருக்கு இடமளித்து யாவற்றினுள்ளும் நல்லன செய்வோம்.

தூய ஆவியாரால் திருத்தூதர் செய்த செயல்கள், திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து நம்மை அறிய வைக்கின்றன.

திருத்தூதர் பணிகள் 2:15-16, 2:8

தூய ஆவியாரால் செயற்பட்ட முதற் கிறிஸ்தவச் சபை பற்றியும் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து நாமறிய முடிகிறது.

திருத்தூதர் பணிகள் 4:32-37

2ம் வத்திக்கான் சங்கக் கூட்டத்திற்குமுன் பரிசுத்த பாப்பரசர் 23ம் அருளப்பர் "தூய ஆவியானவரே புதிய பெந்தக்கோஸ்துவின் வழியாக, இந்த யுகத்திலே எம் மத்தியில் மீண்டும் நீர், அருங் குறிகள் காட்டவேண்டும்" என்று தூய ஆவியாரை வேண்டிக் கொண்டார்.

பூமியை முழுமையாக நிரப்புகிற ஆவியாரே எமக்கு வழி காட்டுகிறாரென இறைமக்கள் விசுவசிக்கின்றனர்.

இதன் மூலம் இந்த உலகில் வாழும் ஏனையோருடன் தேவைகள், விருப்புக்கள், நோயுற்ற நிலையில் இறை பிரசன்னத்தின் அடையாளத்தை அறிந்து பகிர்ந்து கொள்ளவும் முயற்சிக்கின்றனர்.

பொது வழிபாடு அவசியம் - இதை நடத்துகிறவர் தூய ஆவியார்.

பொது ஆராதனைக்கு ஆவியாரால் வழிநடத்தப் படும் விசுவாசிகள் இருப்பது அவசியமாகும்.

இன்று காணப்படும் மாற்று முறைகளும், சபையினுள் நடைபெறும் செயற்றிட்டங்களும் தூய ஆவியாரினது விசேட பிரதிபலனாகவே மதிக்கப் படுகிறது.

இயேசுவிடம் போலவே, ஒன்றியத்திலும் உயிருள்ள தூய ஆவியாரின் செயற்பாட்டிற்கு இடமளிக்க விழிப்புடன் நாமிருக்க வேண்டும்.

## 9ம் பாடம்
### கிறிஸ்தவச் சபையின் ஒன்றிப்பு

காலநிறைவில் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டுமென்ற திட்டமே அம்மறை பொருள்."

கிறிஸ்தவ ஒன்றியமாகிய இறைமக்கள் கிறிஸ்து நாதரிடத்தில் ஒரே உடலாக இருக்கவேண்டும். இதுவே, இறைவனது விருப்பம்.

எபேசியர் 1:10

கிறிஸ்தவ ஒன்றியத்தின் அடிப்படை ஒருமைப் பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கு மூலம், விசுவாசிகளனைவரும் கிறிஸ்துவுடன் ஏற்படுத்திக் கொள்ளும் ஒற்றுமையின் பயன் கிறிஸ்தவ ஒன்றியத்தில் சேர்வதே.

இவர்கள் தூய ஆவியாரின் கொடை வழியாகக் கிறிஸ்துவுடன் ஒன்றிக்கிறார்கள்.

கிறிஸ்தவ ஒன்றிப்பின் ஒருமைப்பாட்டிற்கு அவசியமான பல பண்புகளுண்டு.

எபேசியர் 4:3-6

எல்லோரிடமும் ஒரே இறைவன் செயலாற்றுகிறார். ஆகவே ஒரே பண்புகளுண்டு.

கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஒருமைப்பாடு இவ்வாறான பண்புகளினடிப்படையில்தான் தங்கியுள்ளது.

சகலமும் இயேசுக்கிறிஸ்துவில் ஒன்றிக்கிறது.

அத்துடன் இறை தந்தையிடத்தில் சகலமும் நிறைவு பெறுகிறது.

ஆரம்பத் திருச்சபை

ஆரம்பத் திருச்சபை ஒற்றுமையாக இருந்தது.

திருத்தூதர் பணிகள் 2:42

ஆரம்பத்தில் அவர்கள் ஒரே ஆண்டவரை ஏற்றுக் கொண்டு, ஒரே விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்து, ஒரே திருமுழுக்குப் பெற்று, ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

மற்றவர்களோடு ஒன்றித்துப் பொது நல வாதிகளாகச் செயற்பட்டனர்.

அன்பினூடாக மற்றவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் ஒன்றாக ஆரம்பத் திருச்சபை இருந்தது.

தம் சகோதர மக்களுக்கு அன்பு செய்வது ஆட்சி புரிவதாக இருந்தது.

இவ்வாறு இறைவனின் சித்தத்திற்குள், மற்றவர்களுக்காகத் தியாகச் சிந்தையுடன் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்தனர்.

தூய ஆவியாரின் வழிநடத்தலுக்குக் கீழ்ப்படிந்து ஒற்றுமையாக வாழவேண்டிய அருளை அவரிடமிருந்தே பெற்றனர்.

மக்களுக்கு முன் மாதிரியாக இருந்தனர்.

பின்பற்றுவோர் தொகை கூடியது.

### கிறிஸ்தவ அழைப்பு

**அன்று**

பழைய ஏற்பாட்டில் கானானில் ஒன்றித்து வாழ இறை விசுவாசமாகிய அடித்தளம் உதவியது.

இறைவனே அரசன், படைப்பின் உரிமையாளர் என ஏற்றனர்.

அனைத்தையும் இறைவனது விருப்பமென ஏற்றனர். இறைவல்லமையின் கீழ் ஒன்றாக எழுந்து நின்றனர்.

விடுதலையையும் இதனால் பெற்றனர்.

**இன்று**

தம் உயிரை அனைவர்க்காகவும் பலியாக்கி, உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு இன்றும் தூய ஆவியார் வழியாக இறைமக்களிடத்தில் ஆழமான ஒன்றிப்பை ஏற்படுத்த முடியுமெனத் திருச்சபை நம்புகிறது.

ஒற்றுமையும், ஒத்துழைப்பும் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்கள் என்று 2ம் அருளப்பர் சின்னப்பர் கூறுகிறார்.

ஒன்றித்துச் சாமாதானமாக வாழ இறைவன் எம்மையும் அழைக்கிறார்.

எமது நாட்டின் சகல மக்களும் முழு சமுதாயத்தினதும் நலன் கருதித் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் போல இறைவனுக்குப் பூரணமாகக் கீழ்ப்படிவதன் மூலம், மற்றவர்களுக்குப் பொது நலச் சேவை மனப்பான்மையுடன் சேவை புரிய வேண்டும்.

– *மெற்றில்டா* –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோகம்தான் பரலோகம்

ஆ. கமல் – இருதயபுரம்

இன்னும்
எத்தனை நாட்களுக்கு...
யூதர்களைவிட
கொடுமையாக
மீண்டும்மீண்டும்
மீட்பரை
சிலுவையேற்றுவோம்.

கட்டிவைத்த
ஆலயத்தில்
கைக்குட்டைவிரித்து
முட்டிக்கால்
இடுபவனே!
ஒரு
கணமேனும்
சிந்தித்துப்பார்
எத்தனை முட்கள்தான்
மீட்பரின்
உடல் முழுதும்
இரத்தக் கீறலிட்டது
அதில் கூட
உன்
கல்மனம்
கிழியவில்லையா?

மனிதனைத்தான்
நீ
மதிக்கவில்லை.
வான மிருண்டு



பூமி யதிர்ந்து
திரைகள் கிழிந்து
இயற்கை கூட
இறை மகனுக்காய்
சாட்சி சொன்னதே.
இந்த இறப்பு
உன் இதயத்தை
இடிக்கவில்லையா ?

பாவத்தைப் புதைக்கக்
கட்டிய
கல்லறைக்குள்
அவரையே
அடக்கம் பண்ணி விட்டு
தேவனுக்கு
அடங்காமல்
அலைபவர்களே!
உயிர்த்த போதாவது
உணரவில்லையா நீங்கள்,
அவர்
உன்னதர் தானென்று.
இனியேனும்
கொடுஞ் செயல்களில்
சிலிர்க்காத
சிந்தைகளையெல்லாம்
சிலுவையேற்றிவிட்டு
திரும்பிப்பாருங்கள்.
பூலோகம்தான்
பரலோகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு மனிதனின் உயிர்ப்பு



R. ஸ்ரான்லி பிரபாகரன்.

சமயம் என்பது சிலருக்கு ஒரு கருது கோளாக, சிலருக்கு கற்பனையாக, வேறு சிலருக்கு தத்துவமாக, இன்னும் சிலருக்கு நல்லொழுக்கங்களை வலியுறுத்தும் அறக் கோட்பாடாகக் காணப்படுகின்றது. ஆனால் அது கிறிஸ்தவர்களுக்கு இவற்றினையும் விட மேலாக ஜீவனுள்ளதாய், ஒரு சத்தியமாய்த் திகழ்கின்றது. இன்னும் கூறப்போனால் இவ்வுலக வாழ்வு முடிந்த பின்னரும் நித்திய ஜீவனைப் பெறுதல் ஆகிய இரண்டையும் கிறிஸ்வதம் தன் இலக்காகக் கொண்டுள்ளது. இவ்வாறாக மண்ணுலக வாழ்வுக்கும் விண்ணுலக வாழ்வுக்கும் நம்பிக்கை அளிக்கும் முக்கிய காரணியாக கிறிஸ்துவின் உயிர்ப்பு காணப்படுகின்றது. இந்த நம்பிக்கையை மக்களிடம் வளர்க்கும் நோக்கத்தோடு திருச்சபையில் இயேசுவின் உயிர்ப்பு முக்கிய விசுவாச மறை பொருளாகவும், சமய வழிபாடாகவும் காணப்படுகின்றது.

சிலர் சமயச்சடங்குகளையும், விசுவாச சத்தியங்களையும், நடைமுறை வாழ்வில் இருந்து வேறுபடுத்தி தனி ஒரு நிகழ்வாக நோக்குகின்றனர். ஆனால் கிறிஸ்தவம் எதனைக் கூறுகின்றது என்பதனை நின்று நிதானிக்க வேண்டும். "கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அது அழிவுறுவதில்லை." வாழ்வு என்பது கடவுளால் வழங்கப்பட்ட கொடை. அந்த வாழ்வினை அவர் எலும்பும் தசையும் உள்ள இவ்வுடலிலேதான் வழங்கினார். இதனைத்தான் எமக்குத் தொடக்க நூல் கூறுகின்றது. எனவே நாம் இரட்சிப்புப் பெற வேண்டும் என எண்ணிச் செய்கின்ற சடங்குகள் அனைத்தும் வாழ்வாக மாறவேண்டும். அதேவேளை வாழ்வுக்கு வலுவூட்ட வேண்டும்.

நற்செய்தியிலும் இதைத் தான் காண்கின்றோம். "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார்" எனவே இறை திட்டம் நிறைவேறுவதில் மனித வாழ்வு மிக முக்கிய இடம் பெறுகின்றது என்பதனை இவை காட்டுகின்றன.

இறை திட்டத்தில் மனிதனுக்குத் தனி இடம் உண்டு. மனிதனுக்காகத்தான் அனைத்தும். தன் அன்பார்ந்த மகனையே மனிதகுல மீட்புக்காக அனுப்பினார் என்றால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவின் பிணைப்பு எவ்வளவு நெருக்கமானது என்பது தெரிகின்றதல்லவா !

இந்தப் பின்னணியில் இயேசுவின் உயிர்ப்பினை நோக்குவோமாயின், இயேசுவின் உயிர்ப்பு மனிதனால் எட்ட முடியாத எல்லையல்ல என்பதை உணரலாம். அந்த உயிர்ப்பு மனிதனுக்கே உரித்தான உரிமையாகும். அதனை அடைய எம் விசுவாச வாழ்வை ஒழுங்கமைப்பதில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. இப்போது கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு சமயச் சடங்காக மாத்திரம் அல்ல. அது மனிதன் வெற்றி கொள்வதற்கான ஒரு கலங்கரை விளக்கினை நோக்கித் தன் குலத்துக்கு நம்பிக்கை தரும் விசுவாச சத்தியமாக அமைகின்றது. இந்த நம்பிக்கையை நடைமுறை வாழ்விலும், எம் மறை வாழ்விலும் பின்பற்றும் விதம்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

முரண்பாடு, வேறுபாடு என்பன உண்மையில் பிரச்சினைக்குரிய விடயமே அல்ல. உதாரணமாக ஆணையும், பெண்ணையும் எடுத்துக் கொண்டால் இயல்பிலும், தோற்றத்திலும், பொறுப்புக்களிலும் இவரும் வேறுபட்டவர்களாக இருந்தாலும் இவர்கள் இணைகின்ற போதுதான் வாழ்வே அர்த்தம் உடையதாகவும், இனிமையானதாகவும் மாறுகின்றது. இவ்வாறு நோக்கினால் இந்த முரண்பாடுகளையும், வேறுபாடுகளையும் இணைக்கின்ற விதத்தில்தான் வாழ்வின் வெற்றியும் வளர்ச்சியும் தங்கியுள்ளது. அதேவேளை, இந்த முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் ஏற்றுக் கொள்ளாமல் சிக்கல்களுக்கு உட்படுவோரையும் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகமே, முரண்பட்ட மன நிலைகளால் தோன்றிய, மனித மேன்மையை இழிவுபடுத்துகின்ற சிக்கல்கள் பலவற்றிற்கு முகம் கொடுக்கின்றது. முரண்பாட்டினால் தீமையையும், பாவத்தையும் ஆதாயமாக்கிக் கொண்ட இந்த உலகுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு உண்மையான மீட்பளிக்கும் செய்தியாகத்தான் காணப்படுகின்றது.

நான் இதோ மடிந்து போகின்றேனே என்னும் அளவுக்கு இன்று மனிதன் வேதனையை அனுபவிப்பதை காண்கின்றோம். ஆனாலும் வேதனையிலேயே மண்டிவிடுகின்ற மனிதர்கள் மிகச் சிலரே, பலர் அதற்கு விடைகாண நிமிர்ந்து எழுகின்றனர். அத்தகைய விடைகள் பிரச்சினைகளுக்கும் உண்மையான தீர்வாக அமைவதில்தான் அதன் பெறுமதி தங்கியுள்ளது.

வாழ்வியல் தொடர்பான சிக்கல்களுக்கு இன்று மனிதன் பல முடிவுகளை முன்வைத்து வருகின்றான். அவை அனைத்துமே முழு நிறைவான தீர்வாக அமைந்து விடுவதில்லை. இன்று மனிதன் எடுத்த தீர்வுகளை நாம் சரியாக ஆராய்கின்ற வேளையில் இந்த உண்மைகள் தெளிவாகப் புலப்படுகின்றன. வாழ்வியற் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற எண்ணத்துடன் மனிதன் எடுத்த முடிவுகள் சிலரை மாத்திரமே திருப்திப் படுத்துவதாகவும். பலரை அவமானப் படுத்துவதாக அல்லது சுரண்டுவதாக அல்லது அழித்து விடுவதாக அமைந்துள்ளது. இவ்வாறாகப் பாதிக்கப்பட்ட சமூகமும் இயேசுவின் உயிர்ப்பில் பங்குகொண்டு, அதனைத் தமது உரிமையாக்கிக் கொள்ள முடியும் என்பதனைக் கேட்கும்போது எமது துன்புற்ற உள்ளங்கள் மகிழ்கின்றன அல்லவா!

**"பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டியதில் பிரதானமானது அவர்கள் இருவரும் அன்புள்ள கணவனும் மனைவியுமாக ஒருமனப்பட்டு வாழ்வதேயாகும்"**

*அன்டனி கியூன்டன்*
அன்புவழிபுரம்,
திரகோணமலை

உயிர்ப்பின் மகிழ்ச்சியை எவ்வாறு நாம் நமதாக்கிக் கொள்ளலாம். மடிந்து போகின்ற பெறுமதியான வாழ்வினை எவ்வாறு உயிருடையதாக்கலாம். வெறும் வழிபாடுகளோடு மாத்திரமே சென்று கொண்டிருக்கின்ற எமது கிறிஸ்தவ வாழ்வினை எவ்வாறு இறைவனுக்கு ஏற்ற அன்புப் பலியாக்கலாம் எனச் சிந்திப்போம்.

"போராட்டமே வாழ்வு, அதன் பின் மரணம்" என்று வாழ்வை முடக்கிக் கொள்பவர்களும் உளர். அதேவேளை "இன்பமே வாழ்வு, அடுத்து மரணம், ஆதலால் அனைத்தையும் அநுபவித்துவிட வேண்டும்" என வாழ்வினை அர்த்த மற்றதாக்கி விடுபவர்களும் உளர். கிறிஸ்தவ வாழ்வு என்பது இவையல்ல. "கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அது அழிவுறுவதில்லை" என்பதை இவ்விடத்தில் மீண்டும் நினைவு கூர்வோம். கிறிஸ்தவர்களுக்கு மரணம் என்பது இவ்வுலக வாழ்வின் எல்லை. அவ்வாறாயின் இவ்வுலக வாழ்வுக்கும், மறுவுலக வாழ்வுக்கும் தொடர்பு இல்லை எனப் பொருளில்லை. இறைவன் மனிதனைப் படைத்து அவனுள் தன் உயிர் மூச்சினை ஊதிய போதே அவன் வாழத் தொடங்கி விடுகின்றான். எனவே இவ்வுலகில் எம் வாழ்வு இறைவன் வழங்கிய அருட் கொடையே ஆகும். அது ஜீவனுள்ளது. துன்பம் என்பது தற்காலிகமானது. மனித குலத்தின் பாவத்தின் விளைவு. எனவே, அத்தகைய துன்பத்தை இன்பமாக்கிக் கொள்ள இயேசு பல வழிமுறைகளைக் கூறியுள்ளார். பகைவனை மன்னித்தல், இடைவிடாமல் செபித்தல், பாவத்துக்கு மனம் வருந்துதல், பகிர்ந்து கொள்ளல், திறன்களைப் பயன்படுத்துதல் இவை உயிருள்ள உலகைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளாகும். எனவே நாம் இயேசு தந்த உயிர்ப்பின் வெற்றியை நடைமுறை வாழ்வில் பெற்றுக்கொள்வோம். எம் அன்றாட வாழ்வினை இயேசுவின் போதனையின் படி சீரமைத்துக் கொள்வதனால் நாம் வாழ்வினைப் பொருளுடைய தாக்கிக் கொள்ளலாம். அன்றாட துன்பங்கள் எம்மை மேற்கொள்ளப் போவதில்லை. ஏனெனில், இயேசுவின் உயிர்ப்பினால் கிடைத்த ஜீவனுள்ள வாழ்வு நமது உரிமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ அடிப்படை வாதம்

அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்
(நவாஜீ)

(சென்றமாதந் தொடர்....)

### 1. அறிவியல் வளர்ச்சி

19ம் நூற்றாண்டு அறிவியல் வளர்ச்சியின் பூரண வெளிப்பாட்டின் காலமாகும். இங்கு மனிதனால் காலங்காலமாக அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்த அனைத்தையும் அறிவியல் சிந்தனையில் நோக்கப்பட்டு அழிந்து விடுமோ என்று தப்பான அபிப்பிராயம் கொண்டு அறிவு சார்ந்த கேள்வியையும், விளக்கத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்து மூர்க்கமாக செயற்பட்டனர்.

### 2. உலகியல் நோக்கு

சமய வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் பெரும் மாற்றம் தோன்றியது. முதியவர்களுக்கும் இளைய சமூகத்தினருக்கும் இடையே விரிசல் நிலை தோன்றியது. இளையவர்கள் உலகியல் போக்கில் வாழ நாட்டம் கொண்டனர். இப்படியே விட்டு விட்டால் உலகியல் போக்கு, கடவுள் மறுப்பு அமெரிக்க சமூகத்தில் அதிகரித்துவிடும் எனப் பயந்த அடிப்படைவாதிகள் அதனைத் தடுத்து நிறுத்தி மக்கள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், ஒழுக்கநெறிகளையும் இம்மியளவும் பிசகாது பின்பற்ற வேண்டுமென்று கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### 3. பரிணாமக் கொள்கை

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகைப் பிரமிப்பில் ஆழ்த்தியது சார்ள்ஸ்டார்வினின் (1809 - 1882) பரிணாம வளர்ச்சிக் கொள்கையாகும். அதாவது மனிதன் குரங்கில் இருந்து தோன்றியவன் என்பதாகும். அதற்கொப்ப விவிலியலாளர்கள் கடவுள் மனிதனைப் படைத்தல் என்பதை முற் போக்குச் சிந்தனையில் பரிணாமக் கொள்கையில், விளக்க முனைந்தனர். இதனை அடிப்படைவாதிகள் எதிர்த்தார்கள். அவர்கள் பரிணாமக் கொள்கையை சாத்தானின் செயல் எனவும் வர்ணித்தனர். விவிலியத்திற்கு புறம்பாக எந்தவொரு அறிவியல் கொள்கையும் போதிக்கப்படக் கூடாது என் பதில் விடாப் பிடியாக இருந்தார்கள். அதற்காக அமெரிக்க அரசையும் தூண்டினர்.

### 4. முற்போக்கு இறையியல் சிந்தனைகள்

19ம் நூற்றாண்டு இறையியலாக்கத்தில் மாற்றங்கள் காணப்பட வேண்டும் என உணரப் பட்ட காலமாகும். ஆங்காங்கே அறிவியலாளர்கள் மரபுவழிச் சிந்தனைகளை விட்டுவிலகி சுதந்திரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். இதனால் முற்போக்கு இறையியல் தோற்றம் பெற்றது. ஹார்னாக் எனப்படும் சீர்திருத்த இறையியலாளர் விசுவாச உண்மைக்கும், சட்டங்களுக்கும் கிறிஸ்து போதித்தவற்றின் சாரத்தையே இருட்டடிப்பு செய்து விட்டதாகவும் கோட்பாடுகளை மட்டும் போதிக்கும் அவர்கள் கிறிஸ்துவிடம் இருந்து பிரிந்து சென்று விட்டதாகவும் கூறினார்.

இவரது போதனையை ஏற்க மறுத்த அடிப்படைவாதிகள் தங்களது முதல் எதிரியாக அவரை நோக்கினர். அவ்வாறே அனைத்து முற்போக்கு சிந்தனை கொண்ட இறையியலாளர்களையும் நோக்கத் தொடங்கினர். அவர்களது நூல்களைப் படிக்கக்கூடாது என்கின்ற கண்டிப்பான சட்டங்களையும் விடுத்தனர்.

### 5. விவிலிய ஆய்வு

விவிலியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அடிப்படைவாதிகளுக்கும். முற்போக்கு வாதிகளுக்கும் இடையில் பெருஞ்சர்ச்சையைத் தோற்றுவித்தன. விவிலிய அறிஞர்களின் கூற்றுப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலிய நூல்கள் வெவ்வேறு காலப் பகுதியில் எழுதப்பட்டதால் அதன் வரலாற்றுச் சூழல், வரலாற்றுப் பின்னணி, இலக்கியக் கூறுகள் என்பவற்றை ஆய்ந்து அவற்றின் ஒளியில் விளக்கங்கள் தரப்பட வேண்டும் என்று வாதிட்டனர். இத்தகைய புதிய ஆய்வு முறை பல புதிய பிரச்சனைகளை உருவாக்கியதால் (உ + ம்) மோசே முழுப் பஞ்சாகம ஆசிரியர் அல்ல. (அதுவே காலங்காலமாக மரபு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது). அதனை அடியோடு அடிப்படைவாதிகள் எதிர்த்தனர். ஏனெனில் அவர்கள் வேதாகமத்திற்கு வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் தெரிவித்தனர். எனவே புதிய விவிலிய விமர்சன முறையை அடியோடு மறுத்தனர். விவிலியத்தில் எவ்வித தவறும் கிடையாது. மாறாக விவிலியம் எல்லாவிதமான அரசியல் பொருளாதார அறிவியல் தொடர்புடைய விடயங்களுக்கும் விடையளிக்க வல்லது என்பதில் விடாப்பிடியாக இருந்தனர்.

**6. உலக சமயங்களின் பாராளுமன்றம்**

அமெரிக்காவின் சிகாக்கோ மாநகரில் 1893ம் ஆண்டில் சமய ஒருமைப் பாட்டின் எண்ணக்கருவில் பல்சமய பாராளு மன்றம் இடம் பெற்றது. இந்தியாவின் சார்பாக பங்கேற்ற சுவாமி விவேகானந்தர் அனைவரையும் கவரும் வண்ணம் பல்சமய உறவு பற்றிப் பேசினார். கிறிஸ்தவ சமயம் மட்டுமே உண்மையானது எனக்கருதிய அடிப்படை வாதிகளால் இதனைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனை எதிர்த்தார்கள். அது மட்டுமல்லாது அமெரிக்க பல்கலைக் கழகங்களில் சமய ஒப்பாராய்ச்சியை (Comparative Study of Religion) ஒரு பாடமாக ஒதுக்கப்பட்டதையும் எதிர்த்தார்கள். அமெரிக்க மண்ணில் கிறிஸ்தவத்தைத் தவிர வேறு மதங்களுக்கு இடமில்லை என்பது இவர்களது வாதம்.

**7. பொதுவுடைமைச் சித்தாந்தம்**

19ம் நூற்றாண்டு ஐரோப்பாவில் கால் மார்க்ஸின் பொதுவுடைமைச் சித்தாந் தம் பரவத்தொடங்கிய காலம். முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவில் இது நுழைந்து விடக் கூடாது என்பதில் அடிப்படைவாதிகள் கருத்தாய் இருந்தனர். இவர்களின் கருத்துப்படி பொதுவுடமைக் கருத்துக்கள் "சாத்தானின் வெளிப்பாடு", உலகிலுள்ள அனைத்து தீமைகளின் காரணி என்று விமர்சனம் செய்து அதனை அழிக்க முற்பட்டனர்.

இவ்வாறு முற்போக்கு சிந்தனைகளின் தாக்கங்களிலிருந்து சமயத்தையும், சமுதாயத்தையும் பாதுகாப்பதற்காகவும், அவற்றிற்கு மாற்றீடாக பழைய மரபுகளைப் பேணி வளர்ப்பதற்காகவும் உருவானதே கிறிஸ்தவ அடிப்படைவாதம்.

**<u>அடிப்படை வாதம் தோன்றிய வரலாறு</u>**

அடிப்படைவாதம் முதல் ஓர் இயக்கமாகத் தோன்றி நாளடைவில் பற்பல சபைகளாக பிளவுற்று வளர்ச்சி பெற்றது. அதன் வரலாற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்து அணுகலாம்.

1) *அடித்தளம் (ஆரம்பம்) 1878 முதல்*

பல்வேறு சீர்த்திருத்தச் சபைகளை சார்ந்த அடிப்படைவாதிகள் 1878ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நயக்கரா எனுமிடத்தில் விவிலிய மாநாட்டிற்காக கூடினர். இதுவே அடிப்படைவாதத்தின் அடித்தளம். இதில் 1895இல் கூட்டப்பட்ட மாநாடு சிறப்பு மிக்கது. அங்கு அடிப்படைவாதத்தின் முக்கிய கொள்கைகள் வரையறை செய்யப்பட்டன. அவை பின்வருமாறு.

1. விவிலியம் முற்றிலும் தவறுகள் இல்லாதது.
2. இயேசுவின் கடவுள் தன்மை.
3. அவர் கன்னியிடமிருந்து பிறந்தது.
4. அவர் பாவங்களுக்காகப் பரிகாரப் பலியானது.
5. அவர் உடலோடு உயிர்த்தது. - அவரது மறுவருகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை காலப்போக்கில் அடிப்படை வாதத்தின் கோட்பாடுகளாக மாறின. இது போன்றே 1880ல் நோர்த்பல்ட் (Nothfield) எனுமிடத்தில் டி.எல்.மூடி (Moody) என்பவர் ஒரு விவிலிய மாநாட்டைக் கூட்டினார். அங்கு அடிப்படை வாதக் கொள்கையை பரப்புவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. அடிப்படைவாதத்தினை வளர்த்ததில் மூடியின் பங்களிப்பு பெரிது. எனவே அவர் 'அடிப் படைவாதத்தின் தந்தை' என சிறப்புப் பெயர் பெற்றார்.

2. *தன்னிலை விளக்கம் (1910 முதல்)*

இங்கு அடிப்படைவாதம் தன்னிலை விளக்கம் வழியாக பாமர மக்களிடையே பரவத் தொடங்கியது. 'உண்மைக்குச் சாட்சியம்' என்ற தலைப்பில் 12 சிற்றேடுகள் வெளியீடு செய்யப்பட்டன. அங்கு காணப்பட்ட இறையியல் கட்டுரைகள் புகழ்பெற்ற அடிப்படைவாதிகளால் எழுதப்பட்டன. அவற்றில் நயக்கரா கொள்கைக்கு இறையியல் விளக்கம் கொடுக்கப்பட்டது. இதனை இலவச வெளியீடு செய்ய அமெரிக்காவின் பல்வேறு தொழில் அதிபர்களும், நிலச் சுவாந்தார்களும் முன்வந்தனர். ஏனெனில் அவர்கள் நோக்கம் எல்லாம் மக்கள் முற்போக்கு சிந்தனைகளை தெரிந்து கொள்ளக்கூடாது. பழைய மரபில் நிலைக்கும் வரை தங்களுக்கும் தங்கள் தொழிலு க்கும் ஆபத்து இல்லை என்று அவர்கள் கருதி யதே காரணமாகும். ஆகவே அமெரிக் காவில் அடிப்படைவாதம் முதலாளித்துவத்தின் கைப் பொம்மையாக மாறியது.

- தொடரும் -

## விட்ட சீடனும் விடாத குருவும்

ஒரு குருவும் சீடனும் நதிக்கரை ஓரம் சென்று கொன்டிருந்தனர் ஓர் இளம் பெண் நீரில் தவறி விழுந்து உயிருக்காகப் பேராடினாள். சீடன் இதைக் கண்டதும் நீரில் குதித்து இளம் பெண்ணைத் தூக்கி நீந்திக் கரைசேர்த்தான். அவள் கப்பாற்றப்பட்டாள்.

மறு நாள் குரு முகத்தைக் கடுமையாய் வைத்திருப்பதைக் கவனித்த சீடன் காரணத்தை வினாவினான் நாம் துறவிகளல்லவா? பெண்களைத் தீண்டக்கூடாது என்று விரதம் பூண்டிருக்கின்றோம். துறவறத்தை இழிவு படுத்தி விட்டாய்'' என்றார். அதற்கு சீடன் மெதுவாக "சுவாமி நான்அந்தப் பெண்ணைத் தூக்கியது உண்மைதான். ஆனால் அடுத்த நிமிடத்தில் அவளை இறக்கிவிட்டேன், நீங்களோ சிந்தனையில் நேற்றுத் தூக்கி வைத்துக் கொண்ட பெண்ணை இதுவரை இறக்கவே இல்லை'' என்று பதிலளித்தார்.

**உண்மை என்பது வெற்றுச் சொற்களால் அலங்கரிக்கப்படும் போதனை அல்ல. அது ஓர் அனுபவம். அனுபவத்தை அனுபவிக்கத்தான் முடியுமே தவிர போதிக்க முடியாதே.**

- ஜே.கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் - 7 முடிவுகள்.



விடைகள்

1) ராகேல் 2) மங்கியபார்வையுடையவள் 3) மந்தைகளை மேய்த்தல்
4) ருபன் 5) தீனா

பரிசு பெறுவோர் (துலா 50/=)

1) **க. எலிசபெத்**
திருக்குடும்ப கன்னியர் மடம்
151, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

2) **ச. யூட் ஜெசாந்**
புனித யூதா ஆலயம்,
தேற்றாத்தீவு - 02,
தேற்றாத்தீவு.

3) **ரொஸ்லின் ஜெயக்குமார்**
83, ரட்ணகிரிய,
பாமஸ்டன்,
லிந்துல.

4) **ஜெக்குலின் சிதம்பரம்**
புனித அந்தோனியார் ஆலய வீதி,
பொத்துவில்.

5) **K. லூட்சினி**
மின்சார நிலைய வீதி,
மூதூர் - 07.

## அறிவை வளர்ப்போம் -7 முடிவுகள்



விடைகள்

1) 42வது ஜனாதிபதி 2) 1913ம் ஆண்டு 3) யென்
4) காபனீரொட்சைட் 5) British Broadcasting Corporation (பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)
6) றியாட்

பரிசு பெறுவோர் (துலா 50/=)

1) **பிரசாந்தி கனரோஜா**
65, பிரதான வீதி,
தம்பட்டை - 02,
தம்பிலுவில்.

2) **அ. றொபட்**
C/O S. அருளானந்தம்
201/12, வடகரை வீதி,
திருகோணமலை.

3) **திரேசினி இருதயநாதன்**
ஜெயக்குமார்
7/3, குமரத்தன் ஒழுங்கை,
ஜெயந்திபுரம்,
மட்டக்களப்பு.

4) **சி. அன்னமேரி**
கலகிரிய தோட்டம்,
கலாபொக்க S.P.C
மடுல்கலை,
கண்டி.

5) **ஹொர்னேலியா ஷாமினி**
இராஜேந்திரம்
65, திருச்செந்தூர் கோயில் வீதி,
கல்லடி,மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

# காற்றில் கலந்து வரும்...

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## மே - 2001

**நாள் : 01, 15, 29**

**நேரம் : மாலை 7.45 மணி**

**சிறுவர் உலகம்**

கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி

திருமறை விநாடி வினா போட்டி

சிறுவர் கதை

குறுநாடகம்

பாடல்கள். இன்னும் பல....

**நாள் : 5, 6, 7, 8, 9, 10, 11**
**19, 20, 21, 22, 23, 24, 25**

**நேரம் : காலை 5.50 மணி**

**கத்தோலிக்க நற்சிந்தனை**

**நாள் : 10, 24**

**நேரம் : மாலை 7.00 மணி**

**புதிய உலகம்**

சிந்தனை உலகம்

திருச்சபைச் செய்திகள்

கவிதைக் களம்

நற்செய்திப் பணியாளர்

சகோ. கிறிஸ்துதாஸ் அவர்களுடனான

நேர்முகம். பாடல்கள், இன்னும்

பல அம்சங்கள்.

நிகழ்ச்சித் தொகுப்பு

மலர்வேந்தன்

தொடர்பு

சமூகத்தொடர்பு நிலையம்

அ.பெ.எண. 44

மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org